DEPOSITION OF WITNESS
Judicial Form No. 53
(See Rule 42)
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 P.W.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திணையரசன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | இராமர் | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**1 ம் எதிரி ஆஜர்**
**2 ம் எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது**

-

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் நடுத்தெரு கடற்கரையில் உள்ள உப்பூரில் வசித்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர். என் அக்காக்கள் திருமணம் நடந்து அவர்கள் ஊரில் வசித்து வருகிறார்கள். நான் பிகாம் சிஎ படித்துள்ளேன்.கடந்த 28.09.2021 ம் தேதியன்று சரண்யா என்பவர் எனக்கு போன் செய்து அடிக்கடி பணம் கேட்பார். எனக்கு அடிக்கடி போன் செய்து அவர் குடியிருக்கும வாடகை வீட்டிற்கு என்னை வர சொன்னார். 28.09.2021 ம் தேதி மதியம் 1.00 மணிக்கு நான் அங்கு போன போது மீட் செய்து என்னை பெண் போலிசார் மற்றும ஆண் போலிசார் சேர்ந்து என்னையும் சரண்யா என்பவரையும் கைது செய்தனர். சரண்யா என்பவருக்கு 500 ரூபாய் கொடுத்தேன். அவர் ரேவதி என்பவருக்கு ரூ 300 கொடுத்தார். என்னை விபச்சார லைனில் இருப்பதாக எண்ணி என்னை கைது செய்தனர். போலிசார் வந்து என்னை மற்றும் சரண்யா என்பவரையும் கைது செய்தனர். மற்றவர்கள் யார் யார்

என்று ஞாபகம் இல்லை. மகளிர் காவல் நிலையத்திற்கு கைதுசெய்து அழைத்து சென்றார்கள் தனித்தனியாக பிடித்து விசாரிக்கும் போது தான் இந்த விவரங்களை தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை என் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் சரண்யா என்பவரின் நண்பர் என்ற முறையில் அவரை பார்க்க வந்திர்கள் என்றால் சரண்யா அன்றாடம் போன் செய்து குடும்ப கஷ்டம் பற்றியும் மற்றும் குடும்பத்தையும் பற்றியும் பேசி வருவார் அதன் மூலம் அன்று வந்தேன். சொன்ன மாதிரி சொன்னால் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் நடைபெறவில்லை என்றாலும் நீங்கள் அன்று சரண்யாவை பார்க்கவில்லை என்றாலும் பேசவும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.